1995 மார்ச் 16]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற 3 பாலங்களும் வெள்ளச் சேதத்திலே பாதிக்கப்பட்டபோது உடனடியாக அரசு துரித நடவடிக்கை எடுத்தது. இந்த வி. கே. புதூர் பாலம் தாம் போகி பாலம். அதை நாங்கள் சீரமைத்து இருக்கிறோம். அதைப்போல நம்முடைய அகரம் பாலத்திலே அப்ரோச் ஸ்லாப் போன்றவைகளை அமைத்து அந்த பாலத்தையும் சீரமைத்து இருக்கிறோம். அதைப்போல நெட்டூர் பாலத்திலும் அணுகு சாலை மற்றும் தடுப்புச் சுவர் கட்டுகின்ற பணியை ஏற்கனவே செய்திருக்கிறோம். உடனடியாக வெள்ள நிவாரணப் பணியிலே செய்யப்பட்டது. இது சம்பந்தமான விவரங்களை அதிகாரிகளிடத்திலே நான் பெற்று மேலும் அந்தப் பாலங்களை ஸ்ட்ரென்த்தன் செய்வதற்கு, அதாவது அவற்றை மேலும் பலப்படுத்துவதற்கான வழிமுறைகளை அரசு எடுக்கும். அது சம்பந்தமான ஆலோசனைகளை, எப்படிச் செய்யலாம் என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே தனியாக எழுதித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே அவர் கொடுக்கின்ற அந்தக் குறிப்பை வைத்து அதிகாரிகளோடு கலந்து பேசி போக்குவரத்திற்கு என்றைக்குமே நிரந்தரமான பிரச்சினை இல்லாத அளவுக்கு அந்தப் பாலங்களை சீரமைப்பதற்கு இந்த நிதி ஆண்டில் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 31, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

31—

தஞ்சாவூருக்குப் பாசன வசதி அளிக்கும் திட்டம்

*** 22629—** திரு. ப. கலியபெருமாள் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி பொதுப் பணித்துறை திட்ட அலுவலகத்தின் மூலம் தஞ்சாவூருக்கு பாசன வசதி அளிக்கும் கோரையாறு திட்டம் 1987-ஆம் ஆண்டே அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டும், அத்திட்டம் நிறைவேறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அத்திட்டம் நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோரையாறுத் திட்டம் மூலம் தஞ்சாவூருக்கு பாசனம் அளிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் கோரையாற்றின் வெள்ள நீர் திருச்சி நகருக்குள் புகுந்து சேதம் விளைவிப்பதைத் தடுக்க, புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம் திருநல்லூர் கிராமம் அருகே கோரையாற்றின் குறுக்கே அணைகட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி திட்ட அலுவலகத்தின் மூலம் என் தொகுதியில் உள்ள செங்கிப்பட்டி பகுதிக்கு கோரையாற்றிலே பெய்கின்ற மழையைப் தேக்கி அந்த நீரைக் கொண்டுவர வேண்டும் என்ற ஒரு திட்டத்தை திட்ட அலுவலகம் தயார் செய்து அனுப்பியுள்ளது. அந்த திட்டத்தை இப்போது நிறைவேற்றுவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரையாற்றினுடைய வெள்ளத்தை தடுப்பதற்கு, அந்த வெள்ள நீர் திருச்சி நகருக்குள்ளே புகுந்துவிடாமலும், திருச்சியை ஒட்டியிருக்கின்ற பகுதியிலே இருக்கின்ற நஞ்சை நிலங்களைப் பாதிக்காத அளவுக்கும், ஏற்கனவே நான் தெரிவித்ததைப் போல 1987 ஆம் ஆண்டில் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டது. அது புதுக்கோட்டை மாவட்டத்தில் குளத்தூர் வட்டத்தில் பெரம்பலூர், ஆம்பரப்பட்டி, செங்கலக்குடி, லட்சுமணபட்டி, செட்டிபட்டி, மான்மையூர் ஆகிய கண்மாய்களும் திருச்சி மாவட்டம் மற்றும் வட்டத்தில் சூரியூர் கண்மாயும் கிடைக்கின்ற வெள்ள நீரால் நிரப்பப்பட்டு பாசன வசதி அளிப்பதற்கான ஏற்பாடுகள் அந்த அறிக்கையிலே தயாரிக்கப்பட்டது. இதனால் ஏறத்தாழ 1600 ஏக்கருக்கு மேற்பட்ட புதிய நிலங்களும் ஏற்கனவே இருக்கின்ற 116 ஏக்கருக்குட்பட்ட நிலங்களும், ஏறத்தாழ 1716 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி செய்வதற்கும், இந்த திட்டத்திற்கு, அறிக்கை தயாரிக்கப்பட்டது. ஆனால் தஞ்சாவூருக்கு இத்திட்டத்தின் மூலம் பாசன வசதி அளிக்க இயலாது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்தத் திட்டம் நம்முடைய அரசினுடைய பரிசீலனையில் தற்போது இல்லை. ஏற்கனவே புதுக்கோட்டையில் இருக்கின்ற திட்டம்தான் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே, அவர் சொல்கின்ற திட்டத்தைப் பற்றி, அவர் விவரமாக எழுதிக் கொடுத்தால், அதை அரசு பரிசீலிக்க முடியுமா என்பதை அதிகாரிகளோடு கலந்து பேசி தஞ்சாவூர் பகுதியிலும் இது போன்ற வெள்ளத் தடுப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு புதிய அணைக்கட்டை கட்டுவதற்கான திட்டம் செய்ய முடியுமா என்பதை ப்ளானிங் அண்டு டிஸைன் மூலம், இன்வெஸ்டிகேஷன் டிப்பார்ட்மென்ட்

மூலம், அதை ஆய்வு செய்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பற்றி பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பற்றி கொஞ்சம் விரிவாகச் சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது. இது 40 ஆண்டு காலத்திற்கு மேலே அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுடைய கோரிக்கையாகும். இந்தக் கோரையாறு பகுதியிலே, பழங்கனாங்குடி பகுதியிலே பெய்கின்ற மழை நீர் வீணாக திருச்சிப் பகுதியிலே வெள்ளமாகச் சென்று அங்கே சேதத்தை விளைவிக்கின்ற அந்த நிலையைப் போக்குவதற்கு, அங்கிருந்த அந்த திட்ட அலுவலகத்தின் மூலம் ஒரு திட்டத்தை நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். இத்தனை கிலோமீட்டர் வரையில்தான் அந்த வாய்க்காலை, அந்தப் பகுதியில் கொண்டு போக முடியும் என்று அந்த அலுவலகத்திலே, அந்த செயற் பொறியாளர்கள் கூறினார்கள். அப்படி கூறுகின்றபோது, அது பொய்கைக்குடி என்ற அந்த திருச்சி மாவட்ட எல்லையோடு அந்தத் திட்டம் நிற்கிறது. அதற்குமேல் கொண்டு செல்ல முடியாது, தஞ்சை பகுதிக்கு, அதை நீங்கள் அரசிடம் சொல்லி வேண்டிய ஆவன செய்யுங்கள் என்று அந்த செயற் பொறியாளர்கள் என்னிடம் கூறினார்கள். அதைத்தான் அரசுக்கு நானும் மனுவாக, விண்ணப்பமாக அளித்திருக்கிறேன். அதன்பிறகு பல்வேறு செயற் பொறியாளர்களை அழைத்துக் காண்பித்தேன். அந்தப் பகுதிகள் இப்போது வறண்டு கிடக்கிறது. இப்போது அங்கே இருக்கிற மக்கள் எல்லாம் வெளியூருக்குச் சென்று விட்டார்கள். மழை இல்லாத காரணத்தால் ஏரிகளில் நீர் இல்லாத கார்ணத்தால், வெளியூருக்கு வேலைக்குச் சென்று விட்டார்கள். அப்படிப்பட்ட பகுதிக்கு 15 ஏக்கர் நிலத்திற்கு அந்த நீரைக் கொண்டு வர முடியுமா என்று பார்க்க, பல திட்டங்களைச் செயற்படுத்திய செயற் பொறியாளர்கள் வந்தார்கள். அந்த கட்டளை வாய்க்காலிலிருந்து பம்பிங் ஸ்டேஷன் மூலம் அந்த ஏரிக்குக் கொடுக்க முடியுமா...

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை மீதா பேசுகிறீர்கள் ? கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதிக்கு தண்ணீர் தரவேண்டும் என்ற திட்டத்தைப் பற்றி இதற்கு முன்னால் இருந்த பொதுப் ப்ணித் துறை அமைச்சர்கள் எல்லாம் அந்தப்

பகுதியில் வந்து பார்த்தார்கள். அப்படிப்பட்ட நிலையில் இன்று பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு வாங்கித் தந்த ஈடு இணையற்ற இந்த 20 ஆம் நூற்றாண்டின் வீராங்கனையாகத் திகழ்கின்ற புரட்சித் தலைவியின் போர் வாளாகத் திகழ்கின்ற மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய கோரிக்கையை, என்னுடைய தொகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பது போல் நம்முடைய தஞ்சாவூர் பகுதியில் இதுபோன்ற திட்டத்தை நிறைவேற்றுவதற்கு செயற்குறிப்பு அரசிடமிருந்து எனக்குத் தரப்படவில்லை. நான் சொன்னதைப் போல புதுக்கோட்டை மாவட்டத்தில் அவர்கள் இதுசம்பந்தமாக ஆய்வு செய்தால் சரியாக இருக்கும். அதிலே பெனிஃபிட் காஸ்ட் ரேஷியோ பார்க்கவேண்டும். ஒரு அணைக்கட்டு திட்டம் கட்டுகிறோம் என்று சொன்னால், கோடிக்கணக்கான ரூபாய் அதிலே செலவு செய்கிறோம் என்று சொன்னால், அதனுடைய பலன் மக்களுக்கு சென்று அடைகிற விதத்தில்தான் அந்தத் திட்டங்களை நாம் தீட்ட முடியும். அந்த அடிப்படையில்தான் இதுபோன்ற பிரச்சினைகள் வருகின்றபோது ஆய்வு செய்து—இன்வெஸ்ட்டிகேஷன் டிபார்ட்மெண்டு என்று ஒன்று இருக்கிறது—அதன் பிறகு பிளானிங் அண்டு டிசைன் என்ற பிரிவு அதை வடிவமைப்பு செய்து இந்தத் திட்டத்தை 1992 ஆம் ஆண்டு டிசம்பரில் நம்முடைய தலைமைப் பொறியாளர் அரசிடம் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு பிறகு நில நிர்வாக ஆணையாளரிடத்திலே இருந்து 1994 ஆம் ஆண்டு செப்டம்பரில் ஒப்புதல் தந்து, இது இப்போது அரசினுடைய பரிசீலனையில் நான் ஏற்கனவே தெரிவித்த திட்டம் இருக்கிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிற திட்டம்—பல திட்டங்களை நாம் பார்வையிடுகிறோம்—முன்னாள் அமைச்சர்களும் பார்க்கலாம்; இன்னாள் அமைச்சர்களும் பார்க்கலாம். ஆனால் அந்தத் திட்டங்கள் மக்களுக்கு பயன் அளிக்கிறதா என்பதை நாம் ஆய்வு செய்ததற்குப் பின்னால்தான் அதனுடைய தன்மையை ஆய்ந்து, அதை அரசு பரிசீலனை செய்து முடிவு எடுத்த பின்னால்தான் அந்தத் திட்டத்தை செயற்படுத்த முடியும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற திட்டத்தைப்பற்றி அவர்கள் விரிவாக என்னிடத்தில் எழுதித் தரவேண்டும். இதை நான் ஏற்கனவே சொன்னது போல் ஆய்வு செய்து, அதற்குரிய பணிகளை நாம் முடுக்கி விட்டு, அந்தப் பிரச்சினையைத் முடித்துத் தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

1995 மார்ச் 16]

ஆகவே, தஞ்சாவூர் பகுதியில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவதற்கு உண்டான செயற்குறிப்பு தற்போது இல்லை. அது சம்பந்தமாக அந்தச் செயற்குறிப்பை விரிவாக, விளக்கமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தரவேண்டும் என்றும், அதை அரசு பரிசீலிக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 32, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

32—

காட்டுமன்னார் கோயில் நகரில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டுதல்

*** 36396**—*திரு. என்.ஆர். ராஜேந்திரன் :*

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், காட்டுமன்னார் கோயில் நகரில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது இல்லை.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்தான் எங்கள் பகுதியில் வீடு கட்டுவோர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் அதிக கடன்கள் வழங்கப்பட்டு சிறப்பாக பணிகள் நடந்து வருகின்றன. மேலும் எங்கள் பகுதியில் அடிக்கடி வெள்ளம் பாதித்து வருகிறது. தெருக்கள் ஒழுங்காக இல்லாமலும், மேடு பள்ளம் நிறைந்த பகுதியாகவும் காட்சி அளிக்கிற அந்த வெள்ளப் பகுதியில், காட்டுமன்னார் கோவில் பேரூராட்சிக்கு உட்பட்ட பிடாரி தெரு, காந்தியார் தெருவில் வசிப்போர் மிகவும் ஏழைகளாக இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பகுதிகளை குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் மாற்றி அமைக்க இந்த ஆண்டு சிறப்பு திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.